2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12–35

9. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 2023–2024, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை @ இம்மாமன்றத்தின்முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கையினை விளக்கிக்கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 30,355.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில் 26,590.09 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 3,499.98 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 265.25 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்று 2023–2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர்

@ 106 முதல் 111 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. தங்கம் தென்னரசு] [2024 பிப்ரவரி 21

"புதுப் பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 15,593.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 1,486.93 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எதிர்பாராத தொடர் மழைபொழிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 541.37 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்குக் கூடுதல் செலவினமாக 1,055.34 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2023–2024 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி)

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	6	--	--
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	8,20,03	--	--

3	நீதி நிருவாகம்	308,01,16	--	--
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	13	315,97,45	30,09
5	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	1,09	117,24,34	91,54,17
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	53	4	53,73
7	மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	46,40,78	--	--
8	பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	27,12,33	33,00,02	150,00,00
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	268,42,52	4	9,99
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	79,19,22	--	60,00
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	27,28,48	--	--

[திரு. தங்கம் தென்னரசு] [2024 பிப்ரவரி 21

12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,078,99,49	--	42,43
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	463,49,80	1	--
14	எரிசக்தித் துறை	15,695,73,78	58,46,45	1
15	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	3	--	2,97,65
16	நிதித் துறை	41,72,57	1	2
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	289,71,39	111,50,00	36,99
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	5,49,33	--	--
19	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	578,78,75	87,17,23	96,31
20	உயர் கல்வித் துறை	69,33,47	4	--
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	41,22,23	28	10,00

2024 பிப்ரவரி 21] [திரு. தங்கம் தென்னரசு]

22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	274,32,44	1	1
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	21,43,15	1	--
24	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	53,95,12	7,10,22	--
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	11,44,11	--	--
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	13	1,399,99,97	3
27	தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை	14	154,59,72	1
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	22,26,98	6,05	--
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	2,09,04	6	43,68

[திரு. தங்கம் தென்னரசு] [2024 பிப்ரவரி 21

30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	6	13,91,52	--
31	தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை	17,80,83	--	--
32	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	135,61,16	2	1,50,00
33	சட்டத் துறை	9,47,26	--	25,00
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	18	9	2
35	மனிதவள மேலாண்மைத் துறை	5,13,21	1,42,59	--
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	6	50,43,74	1,30,30
38	பொதுத் துறை	46,40,02	1	12,00,00
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	29,54,78	14	--
40	நீர்வளத் துறை	198,93,17	50	--
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	374,26,90	--	45,00
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	587,64,68	802,33,66	76,00
43	பள்ளிக் கல்வித் துறை	913,82,05	3	--
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	76,29,00	--	1

2024 பிப்ரவரி 21] [திரு. தங்கம் தென்னரசு]

45	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	1,05	6	--
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	9,68,58	--	62,89
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	42,57,25	3,64,99	--
48	போக்குவரத்துத் துறை	159,12,24	--	8
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	228,15,62	1,99,98	--
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	26	--	--
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	3,183,47,01	--	--
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	20	5,29,42	--
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1,056,17,80	--	--
54	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	36	17	--
	பெருமொத்தம்	26,488,82,01	3,164,18,87	265,24,42

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2023-2024, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023–2024 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) பேரவையில் முன்மொழிவது குறித்து